சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **114 / 2013**

பெயர்: ஆதிசேஷன் வா.சா. 1 தேதி **07.07.2025**

முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. முதல் பிரதிவாதி முத்துசாமி தான் எனது அப்பாவின் அண்ணன் என்றால் சரிதான். கருப்பா நாயக்கர் இறந்த சமயத்தில் எனது அப்பாவிற்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். அவ்வாறே மாரியாயிக்கும் திருமணம் ஆகவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பா பி.எஸ்.சி படித்துள்ளார். அவரை முதல் பிரதிவாதி தான் படிக்க வைத்தார் என்றால் இல்லை. வழக்கு சொத்து 4,5 அயிட்ட சொத்துக்கள் குடியிருப்பு வீடுகள். மேற்படி குடியிருப்பு வீடுகளை பொருத்து கிழக்கு புறம் எங்களுக்கும், மேற்கு புறம் முதல் பிரதிவாதிக்கும் தனித்தனியாக பிரித்து குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு முந்தி இருந்தது. தற்பொழுதும் மேற்படி முதல் பிரதிவாதி மேற்கு புறத்தில் உள்ள வீட்டில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி எங்களுக்கு ஒதுக்கப்பட்ட கீழ் புறம் வீட்டை நாங்கள் வாடகைக்கு விட்டு அவர்கள் குடியிருந்து காலி செய்து விட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி எனது அப்பாவும், பெரியப்பாவும் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பாக மேலே கூறியவாறு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் எனக்கு அது எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு என்று எனக்கு தெரியாது. மேற்படி தாவா 1,2 அயிட்ட சொத்துக்கள் முத்தம்மாள் பெயரில் 1985ம் வருடத்தில் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான்.

2. தாவா 3 அயிட்ட சொத்து பூர்விக சொத்தா என்றால் இல்லை. அது கிரையம் பெறப்பட்ட சொத்து. அது யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் முத்தம்மாளோ , பட்டாயோ என்று சொல்லிக்கொள்வார்கள். மேற்படி கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி கிரையம் 1985ம் ஆண்டு நடைபெற்றது. மேற்படி கிரைய பத்திரத்தில் முத்துசாமியும் சேர்ந்து கிரையம் வாங்கியதாக தான் உள்ளது என்றால் இல்லை. முத்தம்மாள் பெயரில் மட்டும் தான் உள்ளது. நான் கூறியது தவறு என்றால் சரியல்ல. முத்தம்மாள் பெயரில் கிரையம் பெற்ற சொத்தில் 40 ஆண்டுகாலமாகவே முதல் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. முத்தம்மாள் உயிருடன் இருக்கும்பொழுது அவர் கிரையம் வாங்கிய சொத்துக்களை முத்துசாமியின் பெயருக்கு கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரையம் செய்து கொடுத்த விவரம் எனது தகப்பனார் தெரியும் என்றாலும் முத்தம்மாள் 2002ம் ஆண்டு முத்துசாமிக்கு

எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் அடிப்படையில் முத்துசாமி மேற்படி 1,2 இலக்க சொத்துக்களை தனி சுவாதீனமாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பிச்சம்பட்டியில், கருப்பா நாயக்கர் பெயரில் இருக்கும் சொத்துக்களின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் மேற்படி பிச்சம்பட்டியில் உள்ள சொத்துக்களின் விவரத்தை குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. முத்தம்மாள் அஞ்சல் அலுவலகத்தில் சேமித்து வைத்துள்ள பணம் மற்றும் நகைகளை எனது தகப்பனார் படித்தவர் என்பதால் மேற்படி பணம் மற்றும் நகைகளை பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. எங்களுக்கு உண்மையிலேயே பாகம் கிடைக்கவேண்டும் என்று நாங்கள் எண்ணியிருந்தால் மேற்படி கருப்பா நாயக்கர் பெயரில் உள்ள அனைத்து சொத்துக்களையும் காண்பித்திருப்போம் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கும், முதல் பிரதிவாதிக்கும் நெடும்காலத்திற்கு முன்னரே பாகம் பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. கருப்பா நாயக்கருக்கு திருக்காம்புலியூரில் நஞ்சை நிலம் உள்ளதா என்றால் இருந்தது. ஆனால் அதை பிரித்து கொடுத்துவிட்டார்கள். (சாட்சி தற்பொழுது வாய்மொழியாக பிரித்துக்கொடுத்துவிட்டதாக கூறுகிறார்). திருக்காம்புலியூரில் உள்ள சொத்துக்கள் எங்களது அனுபவத்தில் உள்ளது என்றால் நாங்கள் தான் அதில் விவசாயம் செய்துவருகிறோம். திருக்காம்புலியூரில் உள்ள சொத்திலோ, பிச்சம்பட்டியில் உள்ள சொத்திலோ முதல் பிரதிவாதி எங்களுடன் கூட்டு அனுபவத்தில் உள்ளாரா என்றால் கூட்டு அனுபவத்தில் தான் உள்ளார். திருக்காம்புலியூர் மற்றும் பிச்சம்பட்டியில் உள்ள சொத்துக்களை எங்களுக்கும், பெரியக்காள் வாரிசுகளுக்கும் பாகம் பிரித்து சுவாதீனம் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அதன் அடிப்படையில் தான் அந்த சொத்துக்களை நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா 4,5 அயிட்ட சொத்திற்கு கீழ் புறம் நாங்கள் புதிதாக வீடுகட்டி குடியிருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா 4,5 அயிட்ட சொத்தில் கீழ்புறம் உள்ள நாங்கள் குடியிருந்து வந்த வீடு குடியிருக்க முடியாத நிலையில் உள்ளதால் அதனை பூட்டி வைத்து விட்டு தெற்கு புறத்தில் தள்ளி (1 கிலோ மீட்டர்) புதிதாக வீடுகட்டி குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான்.

4. மேற்படி பூட்டி வைத்தாக கூறக்கூடிய வீட்டின் மின்இணைப்பு எனது தகப்பனார் பெயரில் தான் உள்ளது. மேற்படி பூட்டி வீட்டின் மேற்கு புறத்தில் உள்ள முதல் பிரதிவாதியின் வீட்டின் மின் இணைப்பு முதல் பிரதிவாதி பெயரில் உள்ளதா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எங்களது பூட்டி வைத்த வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. ஆனால் வீட்டு வரி ரசீது எனது அப்பா பெயரில் தான் உள்ளது. மேற்படி வீடானது மாடி வீடாகும். இவ்வழக்கில் முதல் பிரதிவாதி குடியிருந்து வரும் வீட்டையும் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவா 1,2,3 அயிட்ட

சொத்துக்களை பொறுத்து முதல் பிரதிவாதிக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் நாங்கள் பாகபிரிவினை கோருவதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா 4,5 அயிட்ட சொத்துக்களிலும் பிச்சம்பட்டி மற்றும் திருக்காம்புலியூரில் உள்ள சொத்துக்கள் பாகமாக எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டு எங்களது அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் விவசாயம் செய்யும் இடத்திற்கும், முதல் பிரதிவாதி விவசாயம் செய்யும் இடத்திற்கும் தனித்தனியாக தீர்வை செலுத்தப்பட்டு அனுபவம் செய்யப்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல.

5. ஏற்கனவே பாகம் பிரித்துக்கொள்ளப்பட்ட சொத்துக்களை பொறுத்து பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. முதல் பிரதிவாதியின் சொத்தை அபகரிப்பதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எல்லா சொத்துக்களையும் இவ்வழக்கில் சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பாகபிரிவினை எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.